**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT COURT, RANIPET**

Case No. **SC.No.5/2025**
Prosecution: **PW6**

Deposition of the witness of **LW7**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.வினோத் குமார் | District | இராணிப்பேட்டை |
| Father Name | திரு.சண்முகம் | Occupation | வாகன ஓட்டுநர் |
| Village /Area | விளாபாக்கம் | Age | 26 |
| Taluk | ஆற்காடு | Aadhar card No. | 2873 7809 0896 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **05.03.2026.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் விளாப்பாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் டிப்பர் லாரி ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் என் ஊரை சேர்ந்தவர்கள். அ.சா.1-சுதாகர், அ.சா.2-அஜித் குமார், அ.சா.3-அண்ணாமலை, அ.சா.4-ஜெகதீஷ் மற்றும் அ.சா.5 - ராகுல் ஆகியோர் என் ஊரை சேர்ந்தவர்கள். 24.10.2022-ம் தேதி இரவு 11.00 மணிக்கு நான் என் வீட்டிற்கு பக்கத்திலுள்ள என் நண்பர் வீட்டில் இருந்த போது வெளியே அலறல் சத்தம் கேட்டு வந்து பார்த்த போது எதிரிகள் யுவராஜ், கோகுல், தானேஷ், தீனா ஆகியோரும் அஜித், சுதாகர், ராகுல், ஜெய், ஜெகதீசன் ஆகியோரும் இருந்தனர். யுவராஜ் என்பவருக்கும் அஜித்திற்கும் சண்டை நடந்து கொண்டிருந்தது. நான் பார்த்த போது யுவராஜ் கத்தியை எடுத்து அஜித் குமாரின் இடது பக்க வயிற்றிலும், இடதுபக்க நெஞ்சிலும், பின் கழுத்திலும், இரண்டு கால் முட்டிகளிலும், இடது கை நடுவிலும் கத்தியால் குத்தினார். அதை பார்த்து சுதாகர் கத்திக்கொண்டே வந்தார். யுவராஜ் அதே கத்தியால் சுதாகரின் வலது காலில் கணுக்காலிலும், இடது கால் தொடையிலும் வெட்டினார். அதை அண்ணாமலை தடுக்க முயன்ற போது யுவராஜ் வைத்திருந்த கத்தியால் அண்ணாமலையின் வலது நடுவிரலில் காயம் ஏற்பட்டது. பின்னர் தானேஷ் சுதாகரையும், ஜெயகணேஷையும் பார்த்து இனிமேல் இங்கே உட்கார்ந்தால் உங்களை முடித்துவிடுவோம் என்று சொன்னார். தீனா என்பவர் சுதாகரின் முதுகில் அடித்து நீ என்ன பெரிய தாதாவா என்று கேட்டார். பின்னர் ஜனங்கள் வந்தவுடன் எதிரிகள் ஓடிவிட்டனர்.

காயம்பட்ட சுதாகரை இராணிப்பேட்டை எஸ்.எம்.எச் மருத்துவமனையில் நான் தான் சிகிச்சைக்கு சேர்த்தேன். காயம்பட்ட அஜித்தை ஆற்காடு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பின்னர் மேல் சிகிச்சைக்காக வேலூர் அரசு மருத்துவமனைக்கு அஜித் குமாரை அனுப்பி வைத்ததாக நான் கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>** இல்லை

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District & Sessions Judge,
Ranipet.